EVERWIN VIDHYASHRAM

**STD: VIII** **TAMIL – L2** **Term - II**

**இயல் - 5**

**கவிதைப்பேழை : 1. திருக்கேதாரம்**

**2. பாடறிந்து ஒழுகுதல்**

**உரைநடை உலகம் : நாட்டுப்புறக் கைவினைக் கலைகள்**

**கவிதைப் பேழை - திருக்கேதாரம்**

I. பொருள் தருக:

1. கனகம் - பொன்
2. வேய் - மூங்கில்

II. குறுவினாக்கள்:

1. தேவாரம் - நூற்குறிப்புத் தருக.

தேவாரம் என்பதனை தே + ஆரம் எனப் பிரித்து இறைவனுக்கு சூட்டப்படும் மாலை என்றும், தே + வாரம் எனப் பிரித்து இனிய ஓசை பொருந்திய பாடல்கள் என்றும் பொருள் கூறுவர்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடிய பாடல்களின் தொகுப்பே தேவாரம் ஆகும்.

2. தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக் கருவிகளாகச் சுந்தரர் கூறுவன யாவை?

தமிழ் இசையோடு முதிர்ந்த மூங்கில்களால் உருவான புல்லாங்குழலும், முழவும் இணைந்து இசைக்கும் இசைக் கருவிகளாகச் சுந்தரர் கூறுகின்றார்.

**கவிதைப் பேழை - 2. பாடறிந்து ஒழுகுதல்**

I. பொருள் தருக:

1. பேதையர் - அறிவற்றவர்
2. செறிவு - மிகுதி

II. குறுவினாக்கள்:

1. பண்பு, அன்பு ஆகியவைப் பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?

பண்பு எனப்படுவது சான்றோர் காட்டிய வழியில் நடத்தல்.

அன்பு எனப்படுவது உறவினர்களோடு வெறுப்பின்றி வாழ்தல்.

2. முறை, பொறை எனபவற்றுக்குக் கலித்தொகை கூறும் விளக்கம் யாது?

நீதிமுறை எனப்படுவது குற்றம் செய்தவருக்கு உரிய தண்டனை வழங்குவது ஆகும்.

பொறை எனப்படுவது தம்மை இகழ்வாரையும் பொறுத்துக் கொள்ளுவது ஆகும்.

3. கலித் தொகை - நூற்குறிப்பு வரைக.

இந்நூல் எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று.

கலிப்பா என்னும் பா வகையால் ஆன நூல்.

150 பாடல்களைக் கொண்டது.

குறிஞ்சிக்கலி, முல்லைக்கலி, மருதக்கலி, நெய்தற்கலி, பாலைக்கலி என ஐந்து பிரிவுகளை உடையது.

**உரைநடை உலகம் - நாட்டுப்புறக் கைவினைக் கலைகள்**

I. பிரித்து எழுதுக:

1. சிற்பக்கலை - சிற்பம் + கலை
2. கைவினைப் பொருள்கள் - கைவினை + பொருள்கள்
3. சிற்றூர் - சிறுமை + ஊர்
4. புறநானூறு - புறம் + நான்கு + நூறு

II. சேர்த்து எழுதுக:

1. கைவினை + கலை - கைவினைக்கலை
2. குதிரை + சிற்பம் - குதிரைச்சிற்பம்
3. பழமை + தமிழ் - பழந்தமிழ்

III. குறுவினாக்கள்:

1. எவற்றையெல்லாம் கைவினைக்கலைகள் எனக் கூறுகிறோம்?

அன்றாடப் பயன்பாட்டுக்காக அழகிய பொருள்களைத் தொழில் முறையில் உருவாக்கும் கலைகளைக் கைவினைக் கலைகள் என்கிறோம்.

2. மண்பாண்டம், சுடுமண் சிற்பம் - ஒப்பிடுக.

மண்பாண்டம்:

சுத்தமான களிமண்ணால் செய்யப்படும் பாண்டங்கள் மண்பாண்டங்கள் ஆகும்.

சுடுமண் சிற்பம்:

மண்பாண்டங்களைப் போல களிமண்ணால் செய்யப்பட்டு சூளையில் சுட்டு எடுக்கப்படுபவை சுடுமண் சிற்பங்கள் ஆகும்.

3. பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?

குழந்தைகளுக்கான கிலுகிலுப்பை, பொம்மைகள், பொருள்களை வைத்துக் கொள்ள உதவும் சிறிய கொட்டான், பெரிய கூடை, சுளகு, விசிறி, தொப்பி, ஓலைப்பாய் போன்றவையாகும்.

4. பாய் வகைகளின் வகைகளை எழுதுக.

தடுக்குப்பாய், பந்திப்பாய், திண்ணைப் பாய், பட்டுப்பாய் தொழுகைப்பாய் போன்றவை ஆகும்.

## இயல் - 6

**கவிதைப்பேழை : 1. வளம் பெருகுக**

**2. மழைச்சோறு**

**உரைநடை உலகம் : கொங்கு நாட்டு வணிகம்**

### கவிதைப் பேழை - 1. வளம் பெருகுக

I. குறுவினாக்கள்:

1. பயிர்கள் வாட்டமின்றிக் கிளைத்து வளரத் தேவையானது யாது?

பயிர்கள் வாட்டமின்றிக் கிளைத்து வளரத் தேவையானது தட்டுப்பாடில்லாத மழை ஆகும்.

2. உழவர்கள் எப்போது ஆரவார ஒலி எழுப்புவர்?

உழவர்கள் போரினை அடித்து நெல்லினைக் கொள்ளும் காலத்தில் ஆரவார ஒலி எழுப்புவர்.

### கவிதைப் பேழை - 2. மழைச் சோறு

I. குறுவினாக்கள்:

1. மழைச்சோறு பாடலில் உழவர் படும் வேதனை எவ்வாறு கூறப்படுகிறது?

கலப்பையைப் பிடித்த தம்பி கை சோர்ந்து நின்றான். ஏற்றம் இறைத்தவன் மனம் ஏங்கி நின்றான்.

2. மக்கள் ஊரை விட்டு வெளியேறக் காரணம் என்ன?

மக்கள் ஊரைவிட்டு வெளியேறக் காரணம் மண் வறண்டும் மாரியாத்தாள் மனம் இறங்காதது ஆகும்.

3. மழைச்சோறு எடுத்தபின் எவ்வாறு மழை பெய்தது?

மழைச்சோறு எடுத்தவுடன் வானத்தில் இருந்து பேய்மழை பெய்ததது. ஊசி போன்ற கால்களால் இறங்கி உலகம் எங்கும் பெய்தது. சிட்டுப் போல மின்னி மின்னி இந்த நாடு முழுவதும் பெய்கிறது. செல்ல மழையாக சீமை முழுவதும் பெய்தது.

### உரைநடை உலகம் - கொங்கு நாட்டு வணிகம்

I. பிரித்து எழுதுக:

| | | |
|---|---|---|
| 1. மாங்கனி | - | மா + கனி |
| 2. தொழிற்சாலைகள் | - | தொழில் + சாலைகள் |
| 3. பின்னலாடை | - | பின்னல் + ஆடை |
| 4. கைத்தறிநெசவு | - | கைத்தறி + நெசவு |

II. குறுவினாக்கள்:

1. மூவேந்தர்களின் காலம் குறித்து எழுதுக.

மூவேந்தர்களின் காலத்தை வரையறுத்துக் கூற முடியவில்லை. வால்மீகி இராமாயணம், மகாபாரதம், அர்த்தசாத்திரம், அசோகர் கல்வெட்டு ஆகியவற்றில் மூவேந்தர்கள் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. இதனால் மூவேந்தர்கள் பன்னெடுங்காலத்திற்கு முற்பட்டவர்கள் என்பதை அறியலாம்.

2. கொங்குநாட்டில் பாயும் ஆறுகள் யாவை?

கொங்கு நாட்டில் காவிரி, பவானி, நொய்யல், ஆன்பொருநை என்றழைக்கப்படும் அமராவதி ஆகிய ஆறுகள் பாய்கின்றன.

3. 'தமிழ்நாட்டின் ஹாலந்து' என்று அழைக்கப்படும் ஊர் எது? ஏன்?

தமிழ் நாட்டின் ஹாலந்து என்று அழைக்கப்படும் ஊர் திண்டுக்கல். திண்டுக்கல் பகுதி மலர் உற்பத்தியில் முதலிடம் வகிக்கின்றது. அதனால் தமிழ்நாட்டின் ஹாலந்து என அழைக்கப்படுகிறது.

## இயல் - 7

**கவிதைப்பேழை : 1. படை வேழம்**

**2. விடுதலைத் திருநாள்**

**உரைநடை உகலம் : பாரத ரத்னா எம். ஜி. இராமச்சந்திரன்**

### கவிதைப் பேழை - 1. படை வேழம்

I. குறுவினாக்கள்:

1. பரணி என்றால் என்ன?

போர்முனையில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றிகொண்ட வீரரைப் புகழ்ந்து பாடும் இலக்கியம் பரணி ஆகும்.

2. சோழ வீரர்களைக் கண்டு கலிங்கா எவ்வாறு நடுங்கினர்?

சோழ வீரர்களைக் கண்டு கலிங்கர் தமது இறுதிக்காலம் நெருங்கிவிட்டதோ என எண்ணி அலைந்து குலைந்து நடுங்கினர்.

3. கலிங்க வீரர்கள் எவ்வாறு அஞ்சி ஓடினர்?

கலிங்க வீரர்கள் ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு ஓடினர்.

தம் நிழலையும், மற்றவர் நிழலையும் கண்டு தமிழர்கள் துரத்தி வருவதாக எண்ணி அஞ்சி ஓடினர்.

4. சோழனின் யானைப் படையைக் கண்ட வீரர்களின் செயல்கள் யாவை?

சோழனின் யானைப் படையைக் கண்ட வீரர்களின் செயல்கள்:

யானையின் பிளிறும் ஓசையைக் கேட்டு அஞ்சிய வீரர்கள் இருள் நிறைந்த குகைக்குள் சென்று மறைந்தனர்.

ஏனையோர் புறமுதுகுகாட்டி ஓடிப் பிழைத்தனர்.

**கவிதைப்பேழை - 2. விடுதலைத் திருநாள்**

I. பொருள் தருக:

1. தேசம் - நாடு
2. பூபாளம் - இராகம்
3. அன்னை - தாய்

II. பிரித்து எழுதுக:

1. முன்னூறு - மூன்று + நூறு
2. முற்றுகையிட்ட - முற்றுகை + இட்ட
3. மூச்சுக்காற்று - மூச்சு + காற்று
4. சூளுரை - சூள் + உரை

III. குறுவினாக்கள்:

1. பகத்சிங் கண்ட கனவு யாது?

பகத்சிங் கண்ட கனவு சுதந்திர இந்தியாவின் புதிய விடியலைக் காண விரும்பியது ஆகும்.

2. 'இருண்ட ஆட்சி' என எதனை மீரா குறிப்பிடுகிறார்?

முந்நூறு ஆண்டுகள் நம்மை அடிமைப்படுத்தி ஆண்ட ஆங்கிலேயே அரக்கர்களின் அந்நிய ஆட்சியை 'இருண்ட ஆட்சி' என மீரா குறிப்பிடுகிறார்.

3. இந்தியத்தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள்?

அடிமையாய்த் தவித்துக் கொண்டிருந்த இந்தியத்தாய் சினந்து எழுந்து தன் கைவிலங்கை உடைத்துப், பகைவரை அழித்து, அவிழ்ந்த கூந்தலை முடித்து நெற்றியில் திலகமிட்டு, இந்தியருக்கு மகிழ்வான காட்சியை அளித்துக் கொண்டுள்ளாள்.

**உரைநடை உலகம்: பாரத ரத்னா எம். ஜி. இராமச்சந்திரன்**

I. பிரித்து எழுதுக:

1. உணவுத்திட்டம் - உணவு + திட்டம்
2. நடிப்பாற்றல் - நடிப்பு + ஆற்றல்
3. திரைத்துறை - திரை + துறை
4. எடுத்துரைத்தார் - எடுத்து + உரைத்தார்

II. குறுவினாக்கள்:

1. எம். ஜி. ஆர். எங்கு, எப்போது பிறந்தார்?

எம். ஜி. ஆர் இலங்கையில் உள்ள கண்டியில் கி. பி. 1917ஆம் ஆண்டு சனவரித் திங்கள் பதினேழாம் நாள் பிறந்தார்.

2. எம். ஜி. ஆர். நாடகத்துறையில் ஈடுபடக் காரணம் என்ன?

எம். ஜி. ஆர். வறுமையின் கொடுமையை நன்கு உணர்ந்தவர். வறுமை காரணமாகவே அவரும், அவருடைய அண்ணனும் பள்ளிப்படிப்பைத் தொடரமுடியாமல் நாடகத்துறையில் ஈடுபட்டனர்.

3. எம். ஜி. ஆரின் சமூக நலத்திட்டங்களுள் நான்கனை எழுதுக.

எம். ஜி. ஆரின் சமூக நலத்திட்டங்கள்:

உழவர்களின் கடன் தள்ளுபடி.

ஏழைகளுக்கான வீட்டு வசதித்திட்டம்.

தாய்சேய் நல இல்லங்கள்.

ஆதரவற்ற மகளிருக்குத் திருமண உதவித்திட்டம்.

4. திரைத்துறையில் எம். ஜி. ஆரின் பன்முகத் திறமைகள் யாவை?

நடிகர், தயாரிப்பாளர், இயக்குநர் போன்றவை திரைத்துறையில் எம். ஜி. ஆரின் பன்முகத் திறமைகள் ஆகும்.

**இயல் - 8**

**கவிதைப்பேழை : 1. ஒன்றே குலம்**

**2. மெய்ஞ்ஞான ஒளி**

**உரைநடை உலகம் : அயோத்திதாசர் சிந்தனைகள்**

**கவிதைப் பேழை - 1. ஒன்றே குலம்**

I. குறுவினா:

1. யாருக்கு எமனைப் பற்றிய அச்சம் இல்லை?

மனிதர்கள் அனைவரும் ஒரே இனத்தினர் ஆவர். உலகைக் காக்கும் இறைவனும் ஒருவனே ஆவர். இக்கருத்துகளை மனதில் நிறுத்துபவர்களுக்கு எமனைப் பற்றிய அச்சம் தேவை இல்லை.

2. மக்களின் உள்ளத்தில் நிலைபெற்று வாழ விரும்புபவர் செய்ய வேண்டியது யாது?

மனிதர்கள் அனைவரும் ஒரே இனம் இறைவனும் ஒருவனே. இதை மனதில் நிறுத்துபவர்களுக்கு எமனைப் பற்றிய அச்சம் இல்லை. கூசாமல் செல்ல வேண்டிய நல்வழி வேறு இல்லை இதுவே மக்களின் உள்ளத்தில் நிலைபெற்று வாழ விரும்புபவர் செய்ய வேண்டியது ஆகும்.

**கவிதைப் பேழை - மெய்ஞ்ஞான ஒளி**

I. பிரித்து எழுதுக:

1. உள்ளிருக்கும் - உள் + இருக்கும்
2. ஐம்பொறி - ஐந்து + பொறி

II. குறுவினாக்கள்:

1. உண்மை அறிவை உணர்ந்தோர் உள்ளத்தில் நிகழ்வது யாது?

உண்மை அறிவினை உணர்ந்தவர்களின் உள்ளத்துக்குள் இன்பப் பெருக்காய் கரைகடந்து பொங்கிடும் கடலாக இறைவன் விளங்குகின்றார்.

2. மனிதனின் மனம் கலங்கக் காரணமாக அமைவது யாது?

இறைவன் திருவடிகளின் மேல் பற்று வைக்காமல் பணத்தின் மீது ஆசை வைத்ததால் தான் மனிதனின் மனம் கலங்குகிறது.

3. எது அரிய செயலாகும்?

ஐம்பொறிகளை அடக்கி ஆள்வது மிகவும் அரிய செயலாகும்.

4. உண்மையான அறிவு ஒளி எனப்படுவது எது?

தம் தீய எண்ணங்களை அடியோடு அழித்தவர்கள் மனத்துள்ளே எழுந்தருளி இருப்பது உண்மையான அறிவு ஒளி ஆகும்.

## உரைநடை உலகம் - அயோத்திதாசர் சிந்தனைகள்

I. குறுவினாக்கள்:

1. அயோத்திதாசரிடம் இருந்த ஐந்து பண்புகள் யாவை?

நல்ல சிந்தனை, சிறப்பான செயல், உயர்வான பேச்சு, உவப்பான எழுத்து, பாராட்டத்தக்க உழைப்பு ஆகியவை அயோத்திதாசரிடம் இருந்த ஐந்து பண்புகள் ஆகும்.

2. ஒரு சிறந்த வழிகாட்டி எவ்வாறு இருக்க வேண்டும் என அயோத்திதாசர் கூறுகிறார்?

ஒரு சிறந்த வழிகாட்டி மக்களும், அவர் தம் நோக்கங்களும் பெருமைப்பட தக்கனவாக இருக்க வேண்டும்.

அவர் மக்களுள் மாமனிதராக, அறிவாற்றல் பெற்றவராக, நன்னெறியை கடைப்பிடிப்பவராக இருக்க வேண்டும் என்று அயோத்திதாசர் கூறுகிறார்.

3. திராவிட மகாஜன சங்கம் எவற்றுக்காக போராடியது?

திராவிட மகாஜன சங்கம், சாலைகள் அமைத்தல், கால்வாய்கள் பராமரித்தல், குடிகளின் பாதுகாப்புக்கு காவல்துறையினரை நியமித்தல், பொது மருத்துவமனைகள் அமைத்தல், சிற்றூர்கள் தோறும் கல்விக் கூடங்கள் ஏற்படுத்துதல் போன்றவற்றுக்காக போராடியது.

4. அயோத்திதாசர் எழுதிய நூல்கள் யாவை?

புத்தரது ஆதிவேதம், இந்திரர் தேச சரித்திரம், விவாக விளக்கம், புத்தர் சரித்திரப்பா முதலியன.

திருவள்ளுவர், ஔவையார் ஆகியோரின் படைப்புகளுக்கு பௌத்த கோட்பாடுகளின் அடிப்படையில் புதிய விளக்கங்கள் எழுதியுள்ளார்.

# இயல் - 9

**கவிதைப்பேழை : 1. உயிர்க் குணங்கள்**

**2. இளைய தோழனுக்கு**

**உரைநடை உகலம் : சட்டமேதை அம்பேத்கர்**

## கவிதைப் பேழை - 1. உயிர்க் குணங்கள்

I. பொருள் கூறுக:

| | | |
|---|---|---|
| 1. பொறை | - | பொறுமை |
| 2. பொச்சாப்பு | - | சோர்வு |
| 3. மையல் | - | விருப்பம் |
| 4. அழுக்காறு | - | பொறாமை |
| 5. மதம் | - | கொள்கை |

II. குறுவினாக்கள்:

1. மனிதர்களின் பொது இயல்பாகக் கன்னிப்பாவை நூல் கூறுவது யாது?

ஆசை, அச்சம், அன்பு, இரக்கம் சினம், நாணம், பொறாமை, துணிவு, இன்பம், துன்பம், சோர்வு, வெறுப்பு, மகிழ்ச்சி ஆகியவை மனிதர்களின் பொது இயல்பாகும்.

2. மனிதர்களிடம் உள்ள நற்பண்புகளாகக் கன்னிப்பாவை நூல் கூறுவனவற்றுள் நற்பண்புகள் யாவை?

அறிவு, கருணை, மேன்மை, எளிமை, அறம், ஊக்கம், வெற்றி ஆராய்ந்து தெளிதல் ஆகியவை மனிதர்களிடம் உள்ள நற்பண்புகள் ஆகும்.

## கவிதைப் பேழை - இளைய தோழனுக்கு

I. சேர்த்து எழுதுக:

| | | |
|---|---|---|
| 1. விழித்து + எழும் | - | விழித்தெழும் |
| 2. தூக்கி + கொண்டு | - | தூக்கிக் கொண்டு |
| 3. நம் + உடையது | - | நம்முடையது |

II. பிரித்து எழுதுக:

| | | |
|---|---|---|
| 1. விழித்தெழும் | - | விழித்து + எழும் |
| 2. போவதில்லை | - | போவது + இல்லை |
| 3. படுக்கையாகிறது | - | படுக்கை + ஆகிறது |

III. குறுவினாக்கள்:

1. கவலைகளைக் கவிஞர் எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?

கவலைகளைக் கவிஞர் கைக் குழந்தையாக உருவகப்படுத்துகிறார்.

2. தோல்வி எப்போது தூண்டு கோலாகும்?

நம்மை நாமே மாற்றினால் தோல்வியும் உன் உயர்விற்குத் தூண்டு கோலாகும்.

3. உன்னை நீயே எவ்வாறு தேற்றுவாய்?

உன்னை தேற்ற ஒருவரும் இல்லையென்று வருந்தாதே!

உன்னை வட ஒருவரும் உன்னைப் பாராட்டிப் புத்துணர்வூட்ட முடியாது.

**உரைநடை உகலம் - சட்டமேதை அம்பேத்கர்**

I. குறுவினாக்கள்:

1. அம்பேத்கர் தன் பெயரை ஏன் மாற்றிக் கொண்டார்?

மகாதேவ் அம்பேத்கர் என்ற ஆசிரியர், பீமாராவ் மீது அன்பும் அக்கறையும் கொண்டவராக விளங்கினார். எனவே ஆசிரியர் மீது உள்ள பற்றால் தன் பெயரை அம்பேத்கர் என மாற்றிக் கொண்டார்.

2. தீண்டாமைக்கு எதிராக அம்பேத்கர் மேற் கொண்ட பணிகள் இரண்டினை எழுதுக.

இந்தியச் சமூக அமைப்பில் நிலவிய சாதியமைப்பையும், தீண்டாமைக் கொடுமைகளையும் எதிர்த்தார்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அதிகாரம் கிடைக்கப் போராடினார்.

3. வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ளும் முன் அம்பேத்கர் கூறியது யாது?

"என் மக்களுக்கு நியாயமாக என்ன கிடைக்க வேண்டுமோ? அதற்காகப் போராடுவேன். அதே சமயத்தில் சுயராஜ்ய கோரிக்கைகளை முழு மனத்துடன் ஆதரிப்பேன்" என்று கூறினார்.